## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 34/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணிய நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 59 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

<u>27.07.2026</u>

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

8. எனக்கும் என் குடும்பத்தாருக்கும் தாவா சொத்து உள்ள அரும்பாக்கம் கிராமத்தில் 6 வீட்டு மனைகளும் 5 ஏக்கர் நிலமும் உள்ளது என்றால் 1 வீட்டு மனையும் என் அப்பா பெயரில் உள்ள 3 ஏக்கர் நிலமும் உள்ளது. நான் மொத்தம் 5 லாரியை வைத்து காய்கறிகளை கோயம்பேடு சந்தைக்கு கொண்டு சென்று வருகிறேன் என்றால் 2 லாரிதான் வைத்துள்ளேன். தாவா சொத்தில் நான் மாடி வீடும் ஓட்டு வீடும் கட்டியுள்ளேன் என்றால் ஓடு வீடு பாழடைந்துவிட்டது. மாடி வீடு கட்டி 6 வருடங்கள் இருக்கும். வழக்கு சொத்தில் வீடு கட்ட கூடாது என்று கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆட்சேபணை செய்தனர் என்றால் மாடி வீடு கட்டி முடிக்கும் சமயத்தில் வந்து ஆட்சேபணை செய்தனர். அதற்கு முன்பு அதே இடத்தில்தான் ஓட்டு வீடு கட்டியிருந்தேன்.

9. நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதை அரசாங்கம் தடுத்து நிறுத்த கூடாது என்பதற்காக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் பட்டாதான் கேட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி நரேஷுக்கும்

எனக்கும் இதுவரை எந்த தகராறும் இல்லை என்றால் அந்த இடத்திற்காக எங்களுக்குள் தகராறு உள்ளது. இதுநாள் வரை எங்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். நரேஷ் என்னிடம் தகராறு செய்கிறார் என்று நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.ரமேஷ் என்ற வழக்கறிஞர் வைத்து நீதிபேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம்.

10. 2ம் வாதி ஜெகதீசன் எனது மகன் என்றால் சரிதான். 3ம் வாதி கவிதா எனது மகள் என்றால் சரிதான். எனது மகள் கவிதாவும் நரேஷும் இன்றுவரை ஒன்றாகதான் உள்ளார்கள் என்றாலும் அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் தகராறும் இல்லை என்றாலும் சரிதான். எனது மகன் ஜெகதீசன் 1 வருடங்களாக எங்கு உள்ளார் என்றால் சிறையில் உள்ளார். என் மகன் கொலை வழக்கு தொடர்பாக சிறையில் உள்ளார். சாமிதாஸின் வழக்கறிஞர் ரமேஷின் சகோதரர்தான் வெங்கடேஷ் என்றால் சரிதான். வெங்கடேஷ் கொலை தொடர்பான வழக்கில்தான் என் மகன் சிறையில் உள்ளார் என்றால் ஆமாம். ஆனால் ரமேஷ்தான் சாமிதாஸின் வழக்கறிஞரா என்பது எனக்கு தெரியாது. மேற்படி கொலைவழக்கில் சாட்சியான பிச்சுமுத்து என்பவரை சாட்சி சொல்ல கூடாது என நான் மிரட்டியதாக என் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

11. மேற்படி என் மீதான வழக்கில் நரேஷ்தான் எனக்கு பிணை கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். நானும் 1ம் பிரதிவாதியும் நல்ல உறவில்தான் உள்ளோம் என்றாலும் அரசாங்கத்தை ஏமாற்றி சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)